# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
# விடுமுறைக்கால சுயகற்றல் செயலட்டை

**ஆக்கம் - நிவிதிகல கல்வி வலயம்**

**கணிதம் – தரம் 9**

**காலம் : 2021.05.31 தொடக்கம் 2021.06.06 வரை**

**திங்கட்கிழமை ( 2021.05.31)**

**பாடம் 08.நேர்கோடுகளுடனும், சமாந்தர கோடுகளுடனும் தொடர்புபட்ட கோணங்கள்.**
**பக்கம் 100 இல் தரப்பட்டுள்ள அறிமுகத்தை நன்கு வாசித்து கொள்க. பின்பு அங்கு தரப்பட்டுள்ள**

1. அடுத்துள்ள கோணங்கள்
2. நிரப்புக் கோணங்கள்
3. மிகை நிரப்பு கோணங்கள்
4. குத்தெதிர்க் கோணங்கள்
5. சமாந்தர நேர்கோடுகள்

என்று ஒவ்வொரு சிறு தலைப்பிற்கும் கீழ் தரப்பட்ட படங்களை வரைந்து அங்கு குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நன்கு வாசித்து பயிற்சி கொப்பியில் எழுதிக் கொள்க.

**செவ்வாய்க்கிழமை (2021.06.01)**

**103** மற்றும் **104** ஆம் **பக்கத்தில்** தரப்பட்டுள்ள மீட்டற் பயிற்சிகள் நான்கையும் பயிற்சி கொப்பியில் எழுதி செய்க.

**புதன்கிழமை (2021.06.02)**

பக்கம் 104 இல் **8.1 நேர்கோடுகளுடன் தொடர்புபட்ட கோணங்கள்** எனும் பகுதியை நன்கு வாசித்துக்கொள்க. பின்னர் **பக்கம் 105** இல் தரப்பட்டுள்ள

- தேற்றம் : **ஒரு நேர்கோடு மீது அமைந்திருக்கும் அடுத்துள்ள கோணங்களின் கூட்டுத்தொகை இரண்டு செங்கோணங்கள் ஆகும்.**

எனும் தேற்றத்தினையும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளவற்றையும் உமது பயிற்சி கொப்பியில் எழுதிக்கொண்டு **"ஒரு நேர்க்கோட்டில் அமைந்திருக்கும் அடுத்துள்ள கோணங்களின் கூட்டுத்தொகை 180 $^{o}$ ஆகும்".**என்பதை விளங்கிக் கொண்டு **106 ஆம் பக்கத்தில்** தரப்பட்டுள்ள உதாரணம்-1,உதாரணம்-2 ஆகியவற்றை பயிற்சி கொப்பியில் எழுதிக் கொண்டு அவற்றைப் பார்க்காமல் ஒருமுறை செய்து பார்க்கவும்.

**வியாழக்கிழமை (2021.06.03)**

**பயிற்சி 8.1** இல் **107** மற்றும் **108 ஆம் பக்கத்தில்** தரப்பட்டுள்ள அனைத்து பயிற்சிகளையும் பயிற்சி கொப்பியில் எழுதிக்கொண்டு தேற்றத்தினை பயன்படுத்தி செய்க.

**வெள்ளிக்கிழமை (2021.06.04)**

**பக்கம் 108** மற்றும் **109** இல் தரப்பட்டுள்ள **குத்தெதிர்க் கோணங்கள்** எனும் பகுதியினை நன்கு வாசித்து விளங்கிக் கொள்வதோடு அங்கு தரப்பட்டுள்ள

- தேற்றம்:- **இரு நேர்கோடுகள் ஒன்றையொன்று இடை வெட்டும்போது உண்டாகும் குத்தெதிர்க் கோணங்கள் சமம் ஆகும்.**

என்பதை உமது பயிற்சி கொப்பியில் எழுதிக்கொண்டு அங்கு தரப்பட்டுள்ள நிறுவலையும் எழுதிக்கொண்டு பின்னர் **பக்கம் 110** இல் தரப்பட்டுள்ள உதாரணத்தையும் எழுதி, பார்க்காமல் மீண்டும் ஒருமுறை செய்து பார்க்க.

**சனிக்கிழமை(2021.06.05)**

**பக்கம் 111** மற்றும் **112** இல் காணப்படும் **பயிற்சி 8.2** இல் தரப்பட்டுள்ள அனைத்து பயிற்சிகளையும் செய்க.

**ஞாயிற்றுக்கிழமை(2021.06.06)**

**பக்கம் 112, 113,114** மற்றும் **115** ஆகியவற்றில் தரப்பட்டுள்ள

**1. ஒத்த கோணங்கள் 2. ஒன்றுவிட்ட கோணங்கள் 3. நேயக் கோணங்கள்**

ஆகிய தலைப்புகளின் கீழ் தரப்பட்டுள்ள குறிப்புகளை படத்துடன் உமது பயிற்சி கொப்பியில் எழுதிக்கொண்டு நன்கு வாசித்து பார்க்கவும்.